# வியட்நாமிலிருந்து சீனப்படைகள் வாபஸ்!

1979-2-26 PERIODICALS DIVISION LIBRARY

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No· QB/89 5/78

மலர்: 21 மாசி 9 ரபி-அவ் 23 இதழ்: 10
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-2-79

இப்பில் இப்பில் கன்றுகள்

ஆடு, மாடு, கோழி வளர்ப்பவர்களுக்கு திறமைமிக்க உணவாகிய "இப்பில் இப்பில் கன்றுகள்" விற்பனைக்கு உண்டு.

(1) "திறிம்மர்" மண்டபம், யாழ்ப்பாணம்.

(2) மெதடிஸ் பண்ணை, கட்டைவேலி.

1700

## "பணிகளைப் பூர்த்தி செய்து திரும்புகின்றன" பீகிங் தகவல்
## 10,000 வியட்நாமியர் பலி!!

பீக்கிங், பெப்ரவரி 20

வியட்நாமிலிருந்து சீனப் படைகள் வாபஸ் பெற்றுள்ளதாக சீன அறிவித்துள்ளது.

சீனப்படைகள் தமது பணியைப் பூர்த்தி செய்த பின்னரே சீனவுக்குத் திரும்பியுள்ளது என்றும் சீன அறிவித்துள்ளது.

சீன-வியட்நாம் சண்டை முடிவுற்று விட்டதென்றும் சீனப்படைகள் வியட்நாமிலிருந்து வாபஸ்பெறப்பட்டுள்ளதாகவும் சகல தூதரகங்களுக்கும் அறிவிக்குமாறு சீன வெளிநாட்டு அமைச்சு தமதுராஜதந்திரிகள் குழுவுக்கு அறிவித்துள்ளது என்று பீக்கிங் செய்திகள் தெரிவிக்கின்றன. [6-ம் பக்கம் பார்க்க]

# துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள்
# பெற்ரோல்நிலையத்தில்கொள்ளை

## டாக்ஸி சாரதியை கட்டிப் போட்டுவிட்டு கைவரிசை!!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு டாக்ஸியை அமர்த்திச் சென்ற 4 இளைஞர்கள் புலோலி பெற்ரோல் நிலையத்தில் துப்பாக்கி முனையில் சுமார் 1500 ரூபாவை நேற்று முன்தினமிரவு கொள்ளையடித்துள்ளனர்.**

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் டாக்ஸியொன்றை கொடிகாமத்திற்கு வாடகைக்கு அமர்த்திச்சென்ற 4 இளைஞர்கள் புத்தூர் சந்தியில் துப்பாக்கிமுனையில் டாக்ஸி சாரதியான ஜேசுராசாவை கட்டி பின் ஆசனத்திற்கு கீழே கிடத்திவிட்டு, பருத்தித்துறை நோக்கிச் சென்றதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இரவு 8 மணிக்கு புலோலி ப. நோ. கூ. சங்க பெற்ரோல் நிலையத்திற்கு டாக்ஸியில் சென்ற இளைஞர்களில் இருவர் இரு துப்பாக்கிகளையும் மற்றொருவர் கிறிஸ்கத்தியையும் காட்டி பயமுறுத்தி பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

டாக்ஸி கரணவாய் வடக்கில் அனாதரவாக கண்டுபிடிக்கப்பட்டது. வல்வெட்டித்துறைப் பொலிசார் சாரதியை மீட்டனர். இதுதொடர்பாக பருத்தித்துறை பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. [புலோ]

### யாழ். பல்கலைக்கழகத்தில

## விவசாயபீடம்!

### உபவேந்தர் அறிக்கை சமர்ப்பிப்பார்

[கொக்குவில்]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் விவசாயபீடம் அமைப்பது தொடர்பான அறிக்கையை அடுத்த கூட்டத்தில் உபவேந்தர் சமர்ப்பிக்க வேண்டுமென யாழ். பல்கலைக்கழக கவுன்சில் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கல்விக்கூடம், நூலக பயிற்சிக்கூடம் அமைப்பது தொடர்பான அறிக்கைகளையும் அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவைச்சேர்ந்த 4 மாணவர்களை பரீட்சையில் பார்த்து பிரதிசெய்து எழுதியதாக நடந்த விசாரணையின்பின் அவர்களை ஒருவருடம் நீக்கி வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த கவுன்சில் கூட்டம் மார்ச் 16ம் திகதி நடைபெறும். [க]

### இடமாற்றம் பெற்ற அரச ஊழியர்

## புதிய இடங்களுக்கு இதுவரை செல்லாவிடின்பதவிஇழப்பர்

[கொழும்பு]

வருடாந்த இடமாற்றம் பெற்ற அரசாங்க ஊழியர்கள் புதிய இடங்களுக்குச் சென்று தமது பதவிகளைப் பொறுப்பேற்காவிடின் தமது பதவிகளை இழந்தவர்களாகவே கருதப்படுவர்.

இவ்வாறு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை புதிய இடங்களில் பதவிஏற்காத இடமாற்றம்பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு வேலைநீக்க கடிதங்கள் விரைவில்அனுப்பப்படும்என்று அமைச்சு அறிவித்துள்ளது.

இடமாற்றம் பெற்ற பின்னரும் இதுவரை விடுவிக்காத ஊழியர்களை உடன்விடுவிக்குமாறும் அமைச்சு சகல திணைக்களங்களுக்கும் உத்தரவிட்டுள்ளது. [இ]

### தமிழ்ப் பகுதியில்—

## புற்றுநோய் ஆஸ்பத்திரி நிறுவவெளிநாட்டுதமிழர் நிதி உதவி

### டாக்டர் கனகரத்தினம் தகவல்

[யாழ்ப்பாணம்]

தமிழ்ப் பகுதியில் உள்ள புற்றுநோயாளர்களின் நன்மை கருதி வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களின் உதவியுடன் இலங்கையில் தமிழ்ப்பகுதியில் சகல வசதிகளையும் கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்று நிறுவப்படவுள்ளது. இந்த ஆஸ்பத்திரியை அமைப்பதற்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களும் உள்ளூர் ஸ்தாபனங்களும் நிதிஉதவி செய்துவருகின்றனர்.

யாழ். தாதிமார் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற வடபகுதி புற்றுநோய்ச் சங்க கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் கே. கனகரெத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் டபிள்யு. எஸ். நதானியல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் டாக்டர் கனகரெத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்ப் பகுதி புற்றுநோயாளரின் கஷ்டத்தை அறிந்த மலேசியா ஈப்போவில் வசிக்கும் டாக்டர் கணபதிப்பிள்ளை உத்தேச புற்றுநோய ஆஸ்பத்திரியை அமைப்பதற்காக 60 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார். இதே போன்று அமெரிக்காவிலுள்ள ஈழமாதர்சங்கத்தலைவி திருமதி ப. சரவணபவன் 4 500 ரூபா வழங்கியுள்ளதோடு ஆஸ்பத்திரி ஆரம்பிக்கப்பட்டபின் தமது சங்கத்தின் மூலம் மேலும் பண உதவி செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

#### லயன்ஸ் ரோட்டரி நன்கொடை

இலங்கையிலுள்ள பொது நலஸ்தாபனங்களான லயன்ஸ் கழகம் களியாட்டு விழா நடாத்தி அதன் மூலம் கிடைத்த 25 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக எமக்கு வழங்கியுள்ளது ரோட்டரிக் கழகமும் இதேபோன்றுகளியாட்டுவிழா நடாத்தி 40 ஆயிரம் ரூபாவைச் சேர்த்துள்ளது

[6-ம் பக்கம் பார்க்க]

## தமிழர் கூட்டணி செயற்குழு இன்று கூடுகிறது

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு இன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரத்தின் கொழும்பு இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெறவுள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

### இ. தொ. கா. மாநாடு:

## சிவாஜி, ஜெமினி, நாகேஷ் மார்ச். 7ல் வருகின்றனர்

[வெள்ளவத்தை]

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 26வது மாநாட்டிற்காக தென்னிந்திய திரைப்பட நட்சத்திரங்களான நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், நடிகை சுஜாதா, நாகேஷ், எஸ். ஏ. அசோகன் ஆகியோருடன் கவிஞர் கண்ணதாசனும் வருகைதரவிருக்கிறார்கள்.

இவர்கள் அடுத்த மாதம் 7ம் திகதி கொழும்பு வருகிறார்கள்

## மேற்கிந்தியா வெற்றி

(காலி)

இலங்கை கிரிக்கட் கோஷ்டிக்கும் மேற்கிந்திய கிரிக்கட் கோஷ்டிக்குமிடையே காலியில் நேற்று நடைபெற்ற 45 ஓவர் கிரிக்கட் போட்டியில் மேற்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

6ஸ்ரீ லம்பெரட்டா இத்தாலியன் DL மொடல் ஸ்கூட்டர் மிகவும் உன்னத நிலையில் விற்பனைக்குண்டு 754, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசனடி, யாழ்ப்பாணம். 1703

### தேவை

அரிசி ஆலையும், மா அரைக்கும் யந்திரமும் சேர்ந்தாக அல்லது தனித்தனியாக, கல்லுடைக்கும் யந்திரம், இரும்புப்பெட்டி [SAFE], கல்வி நிலையத் தளபாடங்கள், தட்டச்சுக்கள். விலை விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: 1693, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1693


## மகாசிவராத்திரி விழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை பன்னாலை திருவீச்சரம் வள்ளிமலைக் கந்தசுவாமிகோவிலில் மகாசிவராத்திரி உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது

திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தம் எடுப்பதற்காக பாலசுப்பிரமணியப்பெருமான் கருகம்பானை வீதி வழியாகக் கீரிமலைக்கு எழுந்தருளுவார்

உற்சவத்திற்கான ஏற்பாட்டினை ஆலய ஆதினகர்த்தா கு முத்துச்சாமிக்குருக்கள் செய்துள்ளார் [கை]


தயாரித்தவர்: க.குணரத்தினம் மனுதார் சட்டத்தரணி

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்றத்தில் காலஞ்சென்ற வட்டுக்கோட்டை பொன்னம்பலம் முத்தையா பொன்னம்பலம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்திடவர் வட்டுக்கோட்டை மேற்கு பொன்னம்பலம் கைம்பெண் கமலாம்பிகை மனுதார்.

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல 3423

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென் பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்:
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1979ஆம் ஆண்டு தைமாதம் 19ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது 1692


## புதிய அதிபர்

[பண்டத்தரிப்பு]

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தின் புதிய அதிபராக அப்புத்தளை தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு செ. தேவதாசன் இம் மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவர் அப்பத்தளை தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தில் அப்புத்தளை சைவ இளைஞர் சங்கத்தின் காப்பாளராக இருந்து பல சமூக சமய சேவைகளை அப்பகுதியில் செய்துள்ளார். காரைநகர் இந்துக்கல்லூரியில் இந்து நாகரிக விரிவுரையாளராகவும் திரு. தேவதாசன் கடமையாற்றியுள்ளார். [உ]


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சங்கானை, ''யோகஸ்தான்'' அம்பலவாணர் கதிரவேலு அழகசுந்தரம் என்பவரின்மரண சாதனத்தின் விடயத்தில்.

-மரணமெய்தியவர்

அழகசுந்தரம் மகன் ஸ்ரீரதன், 'யோகஸ்தான்' சங்கானை, தற்பொழுது 17, லதம் ரோட், லண்டன் ஈ-6 அவரது தத்துவகாரி அழகசுந்தரம் கைம்பெண் பத்மராணி, 'யோகஸ்தான்', சங்கானை

- மனுதார்

மரணசாதன)
நியாயாதிக்கம்) இல. ரி/ 3411

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்குமேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு பங்குனிமாதம் 14ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

என்னால் தயாரிக்கப்பட்டது:-
இ. சிவரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.

1979ம் ஆண்டு மாசி மாதம் 15ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 1690


## "ஆசிரியர்களைப் பெற்றோர் மதிக்கவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''பிள்ளைகளின் ஒழுக்கத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் கூடிய கவனம் செலுத்தவேண்டும். ஆசிரியர்களையும் அதிபரையும் பெற்றோர் மதிக்கவேண்டும்'' என்று மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியசங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு. நம. சிவப்பிரகாசம் பேசுகையில் கூறினார்.

பழைய காலத்தில் ஒழுக்கம் ஓங்கியிருந்ததென்றும், ஆசிரியர்களைப் பெற்றோர் மதித்து நடந்தனரென்றும் கூறிய திரு. நம சிவப்பிரகாசம், அந்தக்காலத்தில் இவ்வித்தியாலயத்தில் ஒரே ஆசிரியராகப்பணியாற்றியவரும் ஒழுக்கத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தவருமான தில்லையம்பலர் சட்டம்பியாரின் உருவப் படத்தை இவ்வித்தியாலயத்தில் வைப்பதற்கு அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்

வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. ச வேலாயுதபிள்ளை தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

மல்லாகத்திலுள்ள உள்ளூர் ஸ்தாபனங்களின் தலைவர்கள், பிரமுகர்கள், நூற்றுக்குமேற்பட்ட பெற்றோர்கள் பிரசன்னமாயிருந்தனர். பாடசாலை அதிபர், பெற்றோர் ஆசிரியர் சங்கம் அமைக்கவேண்டிய தன் அவசியத்தையும் இவ்வாண்டு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளவேண்டியசெயற்திட்டங்களையும் எடுத்துக்கூறினார்.

கூட்டத்தை ஆரம்பித்து மல்லாகம் சைவசமய அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. அ சரவணமுத்துபேசுகையில், பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வியில் கண்ணுங்கருத்துமாயிருத்தல் வேண்டுமென்றும், தேடிவைக்கும் சொத்துக்களாகிய காணிபூமியைவிடக் கல்வியே அவர்களுக்குப் பெருஞ்சொத்தாகுமென்றும் கூறினர்.

டாக்டர் மு, வேதாரணியம் பேசுகையில்

கல்வித் திட்டத்தை அடிக்கடி மாற்றிப் பிள்ளைகளைத் தொல்லைப்படுத்தாது, சிறந்த அம்சங்கள் அடங்கிய கல்வித் திட்டத்தை நடைமுறைப் படுத்த அரசும், பொதுமக்களும் முன்வரவேண்டுமென்று கூறினர். மல்லாகம் கி. மு. சங்கத் தலைவர் திரு சு. ஸ்ரீ பாஸ்கரன் உட்படப் பலரும் பேசினர்.

கூட்ட முடிவில் பின்வருவோர் சங்க உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர் ச வேலாயுதபிள்ளை, உப தலைவர்: மு தனபாலசிங்கம், செயலாளர் மு நாகேந்திரசர்மா, இணைச் செயலாளர் ஐ பாலசுப்பிரமணியம், தனாதிகாரி மு கிரு

(5-ம் பக்கம் பார்க்க)


## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல: ஈடு/660

சின்னத்தம்பி தியாகராசா,
சரவணை மேற்கு, வேலணை. வழக்காளி

எதிராக

குமாரு குழந்தைவேலு,
9ம் வட்டாரம், சரவணை கிழக்கு, வேலணை.

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு: 660-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1979ம் வருடம் பங்குனிமாதம் 20ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 3710/-ம் 1977-12-6 தொடக்கம் 1978-7-24 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 18 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 540-60 சதம்,

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவு ப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை இறை சீமாகரப்பியனும் பாலையன் கரப்பியனும், நெ. பர. 13 1/3 பதின் மூன்றிருடு மூன்றிலொன்றும் பனைகள், தென்னைகளும், கிணறும், எல்லை கிழக்கு நாகநாதி சோமசுந்தரத்துக்கும் பெண் பூங்காவனத்துக்கும் உரியவாதனம், வடக்கு நா. தம்பிராசா பெண் தங்கம்மாவினுதனம். மேற்கு குறித்த தங்கம்மாவினுதனமும், இரத்தினகோபால் மகள் ரோகினியினுதனமும், தெற்கு இரத்தினகோபால் மகள் ரோகினியினுதனமும் இதடங்கலும்.

எஸ். சங்கரப்பிள்ளை,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

வேலபதி,
புத்தூர்,
15-2-79 1701



## பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணும் வேலைகட்கு ஆட்கள் தேவை

[1] பிரயாணஒழுங்குகள் [ரவல் ஏஜன்சில்] கடமையாற்ற அனுபவம் உள்ள சுருக்கெழுத்து, தட்டெழுத்து [ஆங்கிலம்] தெரிந்த பெண் ஒருவர்.

[2] குடிப்பழக்கமற்ற நாணயமான வான் சாரதி ஒருவர்.


[3] தொழிற்சாலையைப் பொறுப்பாக மேற்பார்வை செய்வதற்கு தகுதிவாய்ந்த ஒருவர்.

[4] விற்பனைப் பிரதிநிதி ஒருவர்.

மேற்கூறியவற்றுக்குத் தகுதிவாய்ந்தவர்கள் உடன் நேர்முகமாக உரியசான்றிதழ்களுடன் சமுகந்தரவும் தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.

லங்மன் என்ரபிறைசஸ்,

275 1/2, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம். 1699

## தம்பதிகளும், ஸ்தாபனமும் நன்றி கூறுகிறார்கள்

மில்க்வைற் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மணமகன் இ.தவகோபால் மணமகள் தேவராணி தம்பதிகளும் மில்க்வைற்ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் சென்ற வாரம் நடைபெற்ற திருமண விழாவுக்கு வருகை தந்தோர், வாழ்த்துரை வழங்கியோர், பரிசளித்தோர், வாழ்த்துக்கள் அனுப்பியோர் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றி கூறுகிறார்கள். 1694


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



# எஸ்.பி. சாமி அன் கொம்பனி

193, மின்சார நிலைய விதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7025

J. L. மொறிசன் சன் அன் ஜோன்ஸ் லிமிட்.
ஸ்தாபனத்தாரின் விவசாய இரசாயனப் பொருட்களுக்கு வடபகுதி ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உங்களுக்குத் தேவையான

∵ மொறிசிட் ∵ எலோரால் ∵ 34 டி. பி. ஏ.
∵ ரேகோர் ∴ மன்கோசெப் ∵ எம். சி. வி. ஏ.
∴ மொறெக்ஸ் ∵ குப்ருல் ∵ கொம்பிளசால்

ஆகிய விவசாய இரசாயனப் பொருட்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

## சிங்களத் தேர்ச்சிப் பிரச்னை:

# "அமைச்சர்கள் தீர்க்க விரும்பினும் திணைக்களத் தலைவர்கள் தயாரில்லை"

[பண்டத்தரிப்பு]

"தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு உதவுவதற்குத் திணைக்களத் தலைவர்கள் விரும்புவதில்லை அமைச்சர்கள் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குச் சலுகையளிக்க முன்வந்தாலும் திணைக்களத் தலைவர்கள் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக எவ்வளவு பாதகமாக இயங்கமுடியுமோ அவ்வளவு பாதகமாக நடந்துகொள்வார்கள் "

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

பரிசாரகர்களை எதிர்நோக்கும் சிங்களத் தேர்ச்சிப் பிரச்னை பற்றி ஆராயுமுகமாக மேற்படி சங்கத்தின் தெல்லிப்பழைக் கிளையின் சார்பில் ஏற்பாடுசெய்யப்பட்ட இக்கூட்டத்திற்குக் கிளைச் சங்கத் தலைவர் திரு. சி. த சோமசுந்தரம் தலைமைவகித்தார்.

திரு. ஏ அமிர் தலிங்கம் தமதுரையில் மேலும் கூறியதாவது:

### தொடர்ந்து போராடுகிறோம்

"தமிழ் அரசாங்க ஊழியர்கள், சிங்களமொழித் தேர்ச்சி நிபந்தனையால் எதிர்நோக்கும் கஷ்டங்களைப் பற்றி நாங்கள் பாராளுமன்றத்தில் பேசுவதுடன் மாத்திரம் நின்றுவிடாது ஜனதிபதிக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் கடிதங்கள் எழுதியும், மகஜர்கள் சமர்ப்பித்தும் வாதாடிக்கொண்டுதான் வருகின்றோம்.

"அண்மையில் சிங்களத் தேர்ச்சிபெறத் தேவையில்லாத அரசாங்க ஊழியர்களின் விபரங்களைத் தமக்கு அறிவிக்குமாறு திணைக்களத் தலைவர்களுக்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது திணைக்களத் தலைவர்களில் பெரும்பாலோர் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு உதவி செய்ய முன்வராத மனப்பாங்குடையவர்கள். அமைச்சர்கள் முன்வந்தாலும், திணைக்களத் தலைவர்கள் அதற்கு விட்டுக்கொடுக்க முன்வரமாட்டார்கள். தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வளவு பாதகமாக இயங்கமுடியுமோ அவ்வளவுக்குப் பாதகமாகக் கடமையாற்றுபவர்கள் இத் தலைவர்கள்.

### பெரும் அநீதி

"7ம் வகுப்புத் தராதரத்துடன் சேர்க்கப்பட்டுத் தமிழ் பகுதிகளில் கடமையாற்றி வரும் பரிசாரகர்களுக்குச் சிங்களமொழித் தேர்ச்சி நிபந்தனை விதித்திருப்பது மிகவும் அநீதியாகும். இவர்களின் கஷ்டங்கள் பற்றி ஏற்கனவே பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் நடத்திய மாநாட்டில் விபரமாகப் பேசியிருக்கிறேன் இது பற்றி மற்ருெரு மாநாடு நடைபெறவிருக்கிறது. அதில் இப்பிரச்னை பற்றி விபரமாக எடுத்துக்கூறி, நிவாரணம் கிடைக்க ஆவன செய்வேன்.

### விதிவிலக்கு வேண்டும்

"புதிய அரசியலமைப்பின் பிரகாரம் சிங்கள மொழித் தேர்ச்சி அத்தியாவசியம்என்று கருதப்படும் அரசாங்க ஊழியர்களைத் தவிர ஏனையோருக்கு அதிலிருந்து விதிவிலக்கு வழங்கப்படவேண்டும். ஆகவே இங்கு தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் பற்றி என்னல் எவ்வளவு தூரம் வாதாடமுடியுமோ அவ்வளவுதூரம் வாதாடி உங்களுக்கு நிவாரணம் பெற்றுத்தருவேன்'' என்ருர்.

இக்கூட்டத்தில் தாய்ச் சங்கத் தலைவர் திரு. பொ. தேவராஜா, பொதுச் செயலாளர் திரு எஸ். செல்லத்துரை, இணைச் செயலாளர் திரு. க. சத்தியமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்கள். [உ]

# மக்கள் கருத்து

## எதிர்க்கட்சித் தலைவர் கவனத்திற்கு

வடமாகாணத்தின் ஒரே ஒரு சயரோக வைத்தியசாலையின் குறைகளை அத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான எதிர்க்கட்சித்தலைவர் விரும்பினல் வைத்தியசாலைக்கு விஜயம் செய்துபார்த்துவிட்டாவது சுகாதார அமைச்சிடமும் அரசாங்கத்திடமும் எடுத்துப்பேசி ஆவன செய்ய வேண்டுமென இவ் ஆஸ்பத்திரிநோயாளர்கள் விரும்புகிருர்கள்.

இவ் வைத்தியசாலைக்கு நிரந்தர பொறுப்பான வைத்திய அதிகாரி இல்லை.

ஒரே ஒரு பெண்டாக்டர், பாவம், அவர்தான் தனியே என்ன செய்வார். வெளிநோயாளர்களையும் ஏழுவார்ட்டுகளிலுள்ள சுமார் இருநூறு நோயாளிகளையும் சோதிக்க வேண்டியிருக்கிறது. அவருக்குத் துணையாக குறைந்தது ஓர் உதவி டாக்டராவது இல்லை.

நோயாளரீர் வார்ட்டுக்கள் எட்டு உள்ளன. அதில் ஐந்தாம் வார்ட் பாவிக்கமுடியாத நிலையிலுள்ளது. மற்றைய ஏழு வார்ட்டுகளிலுள்ள நோயாளர்களையும் ஒரே டாக்டர்தான் பார்க்கவேண்டும் இவர்களைப் பார்த்துவிட்டு வரும்வரை வெளிநோயாளர்கள் காவல் நிற்க வேண்டியிருக்கிறது

„வாரமிருமுறை" அதாவது ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் பண்ணையிலிருந்து ஒரு டாக்டர் வருவார். இது போதுமா?

இதிலிருந்து இவ்வைத்தியசாலையையும் சாதாரண கிராமப்புறங்களிலுள்ள சிறு வைத்தியசாலைபோல் சுகாதார அமைச்சு மதிப்பிட்டிருப்பதாகவே கருதத் தோன்றுகிறது.

அடுத்ததாக ஊழியர்கள் குறைபாடு, தாதிகள், கங்காணிமார் மற்றும் சிறு தொழில் செய்வோர் இவர்களில் நோயுற்று லீவிலுள்ளவர்களுக்கும், ஓய்வு பெற்றவர்களுக்கும் பதிலாக வேறுபுதிய ஊழியர்களை நியமிக்காமலிருப்பது மிகவும் கவலைக்குரியது.

வைத்தியசாலையை துப்புரவு செய்யவோ, நோயாளிகளை கவனிப்பதற்கோ போதிய ஊழியர்களில்லை. தாதிமார் சில வேளை இரண்டு மூன்றுவார்ட்டுகளையும் பார்க்க வேண்டிய நிர்ப்பந்த மேற்படுகிறது. முக்கியமாக இரவில் ஏழுவார்ட்டுகளையும் பார்க்க ஒரே ஒரு தாதியை மட்டும் அமர்த்துகிருர்கள்.

அடுத்து முக்கியமாக மருந்து வகைகளும் நோயாளர்களின் உணவுப் பிரச்னையையிட்டும் கவனம் செலுத்த வேண்டும். உரிய மருந்தில்லாததினல் அதற்காக மாற்று மருந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. சிலருக்கு அம்மருந்துகள் ஒத்துவருகிறது சிலருக்கு மாறிநடக்கிறது. நோயாளர்களுக்குக் கொடுக்கும் உணவும் திருப்தியில்லை.

இவ்விஷயத்தை உரியவர்களுக்கு எட்டவைப்பது அது மக்களுக்குச் செய்யும் மகத்தான சேவையாகும்.

--ஒரு நோயாளி

# இன்றைய பலன்

மாசிமாதம் 9ம் திகதி

(21-2-1979)

புதன்கிழமை

மேடம்: பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதியான நடவடிக்கைகள் மூலம் மற்றவர்களுடைய நட்பைப்பெறுவீர்கள். வீட்டிலும் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு

இடபம்: ஆயுதபீடைக்கு இடமுண்டு. எனவே எதிலும் அவதானம் விருப்பத்தக்கது. அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கலாம். தெய்வநம்பிக்கையுடன் சமயோசித புத்தியும் வேண்டும்.

மிதுனம்: கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்கு கனகுஷியான தினம் தாம்பத்திய வாழ்க்கையில் பிணைப்புக்கள் மேலும் பலப்படுத்தப்படும். சிலருக்குத் திடீர் திருமணமும் நடைபெறும்.

கடகம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்துக்கு தடைக்கல்லாக அமைவார்கள். மொட்டைக் கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும். தொழில்துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

சிங்கம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். கால்நடைகள் விருத்திக்கும் இடமேற்படமுடியும்.

கன்னி: பணம் தாராளமாகக் கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்டதேவதையின் அணைப்பும் உண்டு. கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரியின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உற்சாகமான தினம்.

துலாம்: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும் புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும் பூமியால் முன்னேற்றமுண்டு

விருச்சிகம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும். உடல்நலம் பாதிக்கப்படலாம் வீணபொருளால் பணம் விரயமாகலாம். அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

தனுசு: அரசியல் வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம் நான் என்ற அகம்பாவத்தை அடக்கிக்கொள்ளவும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிஅமைக்கும்.

மகரம்: சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர் சொகுசான வாழ்க்கை கிடைக்கும் பிறருடைய மதிப்பிற்கும் இலக்காவீர்கள். வரவேற்கவேண்டிய தினம்

கும்பம்: ஆசாரக் குறைவிற்கும் அவசரப் போக்கிற்குப் இடமுண்டு இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும் பூமிப்பிணக்கினல் வழக்குவிவகாரத்திற்கும் இடமேற்படக்கூடும்

மீனம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான கல்வியிலும் நல்ல அபிவிருத்தி ஏற்படுகின்றது ஆசிரியர்களுக்குச் செல்வாக்குப்பெருக இடமுண்டு

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

[யாழ்ப்பாண [

யாழ், பல்கலைக்கழக ஊழியர் சங்க நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வே ச. சிவலிங்கம், உபதலைவர் என்.கோகுலதாஸ் செயலாளர் இ.ஜெகதீசன், உப-செயலாளர் இ. கிருஷ்ணகுமார், பொருளாளர் பொ. கந்தசாமி உப பொருளாளர் சி. ஜெயரட்ணம், இதழாசிரியர் வி ஞானவரோதயன்.

எட்டுப் பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. [அ]

## ஊழியர் உண்ணாவிரதம்

[காங்கேசன்துறை]

1978 -ம் ஆண்டிற்குரிய ஊக்குவிப்பு போனஸ் பெறமுடியாத காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர் ஒருவர் உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொண்டார் தாபரி என்னும் ஊழியரே உண்ணாவிரத போராட்டத்தை நடத்தினர்

கழுத்தில் கோரிக்கை அடங்கிய அட்டை ஒன்றை மாட்டிய வண்ணம் இவரது உண்ணாவிரதம் நடைபெற்றது. நிர்வாக உயரதிகாரிகள் இவருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இவ்வூழியர் கடந்த ஆண்டு 100 நாட்கள் சம்பளமற்ற லீவில் நின்றதாகவும் அதனல் தான் ஊக்குவிப்பு போனஸ் வழங்கப்படவில்லை. என்றும் கூறப்படுகிறது. [உ/

]நெல், நிரு]

## நாவற்குழி... நாஞட்டானில் சிவராத்திரி விழா

(மன்னர்)

நாஞட்டான் செல்வமுத்து மாரியம்மன் கோயில் மகா சிவராத்திரி சிறப்புற நடைபெறவுள்ளது

திருக்கேதீஸ்வரத்திற்கு தெற்கே சிறுதொலைவில் அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயத்தில் நாஞட்டான் சைவமகாசபையினரால் முதன்முதலாக இவ் விழா நடாத்தப்படுகிறது

(கு-உ)

## ரங்கூனில் கும்பாபிஷேகம்

ரங்கூன், பெப் 20

118 ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ்நாட்டுத் தனவந்தர்களான நாட்டுக்கோட்டை நகரத்தார்களால், பர்மியத் தலைநகராகிய ரங்கூனைச் சார்ந்த பசுமந்தானில் அமைக்கப் பெற்றுள்ள அருள்மிகு நகரத் தண்டாயுதபாணிப் பெருமானுக்கு கடந்த 2ம் திகதி வெள்ளிக்கிழமை காலை புனருத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷே விழா மிகச் சிறந்தமுறையில் நடைபெற்றது. சிவாச்சாரியர்களால் நான்கு நாள் யாகசாலைப் பூசையுடன் இராஜகோபுரத்திற்கும் நான்கு விமானங்களுக்கும் இதர மூர்த்திகளுக்கும் திருக்குட நன்னீராட்டு விழா, சிவநாம முழக்கத்தோடு சிறப்பாக நடைபெற்ற அரிய காட்சியை பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

பர்மாவின் பல பகுதிகளிலிருந்தும் சைவப்பெருமக்களும் பல திருக்கோயில்களின் அறங்காவலர்களும் திரளாக வந்து கலந்துகொண்டனர். யாகசாலைப் பூசை காலங்களில் ரங்கூன் தேவாரக்குழுவினர் தேவார திருவாசகம் முதலிய அருட்பாசுரங்களை ஓதினர் தாய்மார்கள் மிகுதியாய்க் கலந்து கொண்டு தமிழ் மறை யோதியது குறிப்பிடத்தக்கது.

## தீப்பெட்டித் தொழிற் பயிற்சி

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் அச்சுவேலி அரசினர் கைத்தொழிற்பேட்டையில் இயங்கிவரும் தீப்பெட்டித் தொழிற்சாலையில் தேசிய தொழிற்பயிற்சி சபையின் அனுசரணையுடன் பயிற்சி பெறுவதற்கு 200 பயிற்சியாளர்கள் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

இவர்களில் 194 பேர் பெண்களாவர். இவர்களுக்கு இத் தீப்பெட்டி உற்பத்திதொழிற்சாலையில் ஒருவருட காலத்திற்கு சம்பளத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்படுமென்று சங்கஅதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

## மானிப்பாய் இளம் வி. க.

(உடுப்பிட்டி)

விவசாயத்துடன் மட்டும் நின்றுவிடாது உடுவில் விவசாயபோதனசிரியர் பகுதியைச் சேர்ந்த மானிப்பாய் இளம் விவசாயிகள் கழகம் கமத்தொழில் திணைக்களத்தின் ஆதரவுடன் பெண்களுக்கான மனையியல், தையல் கைவேலை போன்ற பயிற்சி வகுப்புக்களையும், விவசாய விஞ்ஞானப் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றது.

யாழ்மாவட்ட இளம் விவசாயிகள் கழகப் பொதுவிழாவில் மனையியல் செய்கை முறைக்கான போட்டியில் இக்கழகமே இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது [உ]

## தொழில் நுட்பப் பயிற்சி

(நெல்லியடி)

தேவரையாளி இந்துக் கல்லூரியில் தொழில் நுட்பபயிற்சி முழுநேரமாக போதிக்கப் படடுவருகின்றது

கடந்த ஆண்டு அரசாங்க திட்ட திணைடி வாராந்த இறுதிநாட்களில் நடாத்தப் பட்ட போதனைகள் இவ் வாண்டு தொடக்கமே முழு நேரப் பயிற்சியாகமாற்றப்பட்டுள்ளது

வானொலி திருத்துதல், தையல், வீட்டுப்பணி போன்ற தொழிற்றுறைகளில் மேற்படி பயிற்சிகள் அளிக்கப்பட்டுவருகின்றன. (உ)

## சீனப்படைகள் திரும்புகின்றன?

# 3500 சீனர் பலி யுத்தம் தொடர்கிறது

# 80 சீன டாங்கிகள் சேதம்

## ஹனோய் வானொலி அறிவிப்பு

லண்டன், பெப். 20

சீனப்படைகள் வியட்நாம் பிரதேசங்களில் இருந்து தம் பகுதிக்குத் திரும்புகின்றன என்று ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றபோதிலும் வியட்நாம்-சீனப் படைகளுக்கு இடையே தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்று வருவதாக ஹனோய் வானொலி அறிவிக்கிறது.

3500 சீனத்துருப்புகள் இதுவரை கொல்லப்பட்டுள்ளதாகவும் 80 சீன டாங்கிகள் சேதமடைந்துள்ளன என்றும் மேற்படி வானொலிச் செய்தி மேலும் தெரிவித்தது.

### ரொக்கட் தாக்குதல்

ரொக்கட் தாக்குதலும் இடம்பெற்றதாக இச்செய்தி கூறியது.

வியட்நாமியப் படைகளுடன் சீன தொடர்ந்து மோதி வருவதாக மாஸ்கோ வானொலி அறிவித்தது.

### ரஷ்யா கோரிக்கை

சீனாவுடன் கொண்டுள்ள தொடர்புகளை மறுபரிசீலனை செய்யுமாறு ரஷ்யா சீனாவின் நட்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. [உ]

---

## தீக்கிரை

[புலோலி]

பருத்தித்துறை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தின் வராந்துப் பனைக் கள்ளுத்தவறணை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பொலிசார் இதுசம்பந்தமாக விசாரணை செய்து வருகின்றனர். [உ]

---

## புதிய கட்டிடத் திறப்புவிழா

[சிறுப்பிட்டி]

"கோப்பாய்த் தொகுதியில் ஒவ்வொரு சிற்றூர்களிலும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தோன்றவேண்டும். திரு சின்னத்துரையின் முன்மாதிரியைப் பின்பற்றி ஏனையோரும் நடத்தல் நன்று."

இவ்வாறு சிறுப்பிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கச் சனசமூக நிலையத்திற்கான புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

இக்கட்டிடத்தை 20 ஆயிரம் ரூபா செலவில் சிறுப்பிட்டியைச் சேர்ந்த திரு. அல்லிக்குட்டி சின்னத்துரை, செல்வி சரஸ்வதி சின்னதுரையின் ஞாபகார்த்தமாக நிறுவியுள்ளார்.

இவ்வைபவத்தில் திரு. சின்னத்துரைக்கு எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இத்திறப்புவிழாவில் திருமதி ப. கதிரவேலுப்பிள்ளை செல்வி சரஸ்வதியின் நிழற்படத்தைத் திரைநீக்கஞ்செய்துவைத்தார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. வை. சொக்கலிங்கம், சங்கத் தலைவர் திரு. ஆ. வேலுப்பிள்ளை ஆகியோரும் பேசினர். [கு-உ]

---

## 'பிஞ்சு உள்ளங்களில் வறுமை ரேகை படராது காப்போம்'

### முதல்வர் எம். ஜி. ஆர். வேண்டுகோள்

சென்னை, பெப். 20

"இளமையில் வறுமை என்ற கொடுமை குழந்தைகளின் வாழ்வில் எழ இடமளிக்காது நாம் பாது காத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளின் பசிப் பிணியைப் போக்க நம்மாலியன்றதைச் செய்தாக வேண்டும்."

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் கண்காட்சியில் அவர் மேலும் பேசுகையில், "குழந்தைகள் கல்வித்துறையில் மேம்படும் சூழ்நிலையை இக்குழந்தைகள் ஆண்டில் உருவாக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

### ரூ. 1 கோடி திரட்ட திட்டம்

இந்நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து சமூகசேவைகள் அமைச்சர் செல்வி பி. ரி. சரஸ்வதி பேசுகையில், "குழந்தைகள் ஆண்டையொட்டி ஒரு கோடி ரூபா அவர்கள் நலனுக்காகத் திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. 1000 ஆதரவற்ற குழந்தைகளை சமூக சேவைகள் இலாகா பொறுப்பேற்கவுள்ளது" என்றார். [உ]

---

## "உயர்பதவி மோகத்தை படித்தவர்கள் கைவிட வேண்டும்"

### தமிழக முதல்வர் அறிவுரை

சென்னை, பெப். 20

"படித்துப் பட்டம் பெறுவோர் உயர்ந்த பதவி தான் வகிக்கவேண்டும் என்று பிடிவாதமாக இருந்துவிடக் கூடாது. எந்த வேலையையும் செய்யக்கூடிய மனோநிலை அவர்களுக்கு உருவாகவேண்டும்"

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சென்னையில் நேற்று நடைபெற்ற கண்காட்சியில் பேசுகையில் கூறினார்.

சமூகசேவைகள் அமைச்சர் செல்வி பி. ரி. சரஸ்வதி இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். [உ]

---

## அசிட் வீச்சு: சந்தேகநபர் சரண்

(வேலணை)

உறவினர் ஒருவருக்கு அசிட் வீசிவிட்டு பொலிசாரிடம் அகப்படாமல் தலைமறைவாகத் திரிந்ததாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிசில் சரணடைந்தார்.

வேலணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கு. விநாயகமூர்த்தி என்பவருக்கு அசிட் வீசிக்காயப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் வி. சிவலிங்கம் பொன்னுத்துரை என்ற பிரஸ்தாபநபர் தேடப்பட்டு வந்தார்.

இவர் பொலிசில் சரணடைந்ததைத் தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பொலிசார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு வை. ஜெகசோதி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை 750 ரூபா பிணையில் செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார். [உ]

---

### குழந்தைகளுக்கு தாய்ப்பால்:

## தாய்மாருக்கு தமிழக அமைச்சர் அறிவுரை

சென்னை, பெப். 20

"குழந்தைகளுக்குத் தாய்ப்பால்தான் கொடுக்கவேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்கக்கூடாது."

இவ்வாறு தமிழ்நாடு சுகாதார அமைச்சர் திரு. சௌந்தரராஜன் நேற்று சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தாய்மாருக்கு இதனைத் தாம் ஒரு வேண்டுகோளாக விடுப்பதாக அமைச்சர் சொன்னார். [உ]

---

## மகஜர்

[நெல்லியடி]

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினால் நடாத்தப்படும் 757ம் இலக்க பஸ்சேவையை நெல்லியடிக்கு ஊடாக நடத்துமாறு உடுப்பிட்டி நவிண்டில் நெல்லியடி பகுதி பொதுமக்கள் மகஜர்மூலம் பருத்தித்துறை டிப்போ அத்தியட்சகரைக் கோரியுள்ளனர். [உ]

---

வாழைத்தண்டிலிருந்து

## காகிதப் பொருட்கள்

லண்டன், பெப் 20

கழிவு வாழைத்தண்டிலிருந்து காகிதப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமென ஆங்கிலேயரான அந்தனி ஹொப்கின்னன் கண்டுபிடித்துள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சீனர்கண்டுபிடித்த காகித உற்பத்தி முறையின் அடிப்படையில் இதனைச் சாதித்துள்ள அந்தனி இத்தொழிலை ஓர் குடிசைக் கைத்தொழிலாக நடத்த முடியும் என்று கூறுகிறார்.

இதற்கு சிக்கன இயந்திரங்கள் தேவையில்லை. வார்ப்பச்சு முறையிலான எளிமையான ஒரு இயந்திரம் காகிதத்தை தயாரிக்கிறது. அந்தனி அமைத்துள்ள இயந்திரங்கள் நன்றாக நீரில் ஊற வைக்கப்பட்ட வாழைத் தண்டுகள் செலுத்தப்படுகின்றன. இயந்திரத்துள் அவற்றை அரைத்து கூழாக்கிவிடுகிறது. கூழுடன் விரும்பிய சாயத்தைக் கலக்கலாம். கூழ் பின்னர் பின்னைற போன்ற நீர் வடியக் கூடிய ஒரு தட்டில் ஊற்றப்படுகிறது. நீர் வடிந்ததும் தட்டுமீது மற்றொரு தட்டு (வார்ப்பச்சு) வைத்து அழுத்தப்படுகிறது. தயாராகும் காகிதம் தடிப்பாக இருக்கும். பின்னர் உலர வைக்கப்படுகிறது.

இக்காகிதம் ஈரநிலையில் உள்ளபோது பல்வேறு வார்ப்பு அச்சுகளை உபயோகித்து முட்டை வைக்கும் பெட்டி, பழங்கள் அடுக்கும் பெட்டி போன்ற பெட்டிகளைத் தயாரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது [க]

---

## பட்டுப்பூச்சி வளர்ப்பு

[புலோலி]

யாழ்ப்பாண விவசாயிகள் பட்டுப்பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டால் வெகுவிரைவில் யாழ்ப்பாணமும் குட்டிக்காஞ்சிபுரமாக மாறிவிடுவது உறுதியென்று யாழ். மாவட்ட கமநலச் சேவைப்பகுதி உதவிப் பணிப்பாளர் திரு அ. ஜெ. செந்தில்நாதன் யாழ்ப்பாணத்தில் இலங்கை மன்றக் கல்லூரி நடாத்திய கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இம்மாவட்ட விவசாயிகள் வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்ச் செய்கையில் மட்டும் ஈடுபட்டு வருவதால் வருவாயை ஈட்டமுடியாதுள்ளனர் என்றும் பட்டுப்பூச்சி வளர்ப்பைக் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளுவதன்மூலம் வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதுடன் நாமும் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். [உ]

---

## மாத்தளை முத்து மாரியம்மன் உற்சவம்

[மாத்தளை]

மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் கொடியேற்றம் இன்று காலை நடைபெறவுள்ளது திருவிழாக்கள் 13 தினங்கள் நடைபெறும்.

அடுத்தமாதம் 10-ந் திகதி தீக்குளிப்பு வைபவமும், 11-ம் திகதி ரதோற்சவமும் நடைபெறும். [கெ-அ]

# திருட்டு முயற்சி: நாய்முறியடித்தது

## கரவெட்டியில் சம்பவம்

[புலோலி]

நள்ளிரவில் வீட்டிற்குள் புகுந்து திருடிக்கொண்டிருந்தவர்களை நாய்காட்டிக்கொடுத்ததாம். கரவெட்டி வடக்கில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இரவில்இங்குள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் வீட்டுச்சொந்தக்காரர்கள் நித்திரையில் ஆழ்ந்திருந்தபோது திருடுவதில் ஈடுபட்டிருந்தனராம்,

இதனைக்கண்ட பிரஸ்தாப வீட்டுநாய் குரைத்தபடி திருடர்களின்மேல் பாயமுயலவே திருடர்கள் கையிலகப்பட்ட பொருட்களையும் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனராம்சத்தம்கேட்டு விரைந்தஅயலவர்களும் கரவெட்டி வடக்கு கிராமசேவை அலுவலர் திரு.பொ.மாணிக்கவகசகரும் திருடர்களைத் துரத்தி ஒருவரைப் பிடித்துக்கொண்டனர்.

மற்ற இரு திருடர்களும் தப்பியோடிவிட்டனர். பிடிக்கப்பட்டநபரை கிராமசேவை அலுவலர் மாணிக்கவாசகர் பருத்தித்துறைபொலிசாரிடம் ஒபபடைத்தார். மற்ற இருவரையும் பருத்தித்துறைபொலிசார் தேடிவருகின்றனர்- [உ]

# ஏப்ரல் 15-ல் மாநாடு: சி.பா.த.வி. முன்னணிமுடிவு

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணியின் வருடாந்த மகாநாட்டை ஏரல் 15-ந் திகதி நடத்துவதென முன்னணிச் செயற்குழு தீர்மானித்துள்ளது

முன்னணிச் செயலாளர் இல்லத்தில் சட்டத்தரணி திரு வி தர்மலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் மார்ச் 24-ந் திகதிக்கு முன்னர் மூக்கிய தீர்மானங்களை அனுப்பி வைக்குமாறு கிளைகளைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

மட்டக்களப்பில் சூறுவளியால் பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளருக்கென வசூலிக்கப்பட்ட நிதி இதுவரை அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

மட்டக்களப்பு சீவல் தொழிலாளர் அனுப்பிய மகஜர் ஒன்று ஆராயப்பட்டது அம்மகஜரில் மட்டக்களப்பில் சூறுவளியால் பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளர்கள் குடியிருக்கவோ, தொழில் வசதியின்றியோ மிகவும் கஷ்டமான நிலையிலிருபபதாகவும், தங்களுக்கு நிவாரண நிதியாக எதுவும் வழங்கபபடவில்லை என்றும், 3200 மட்டை கிடுகு மாத்திரமே தங்களுக்குக் கிடைத்திருபபதாகவும், தங்களுக்கு விரைவில் நிவாரணமளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தது.

சூறுவளியால் பாதிக்கப்பட்ட சீவல்தொழிலாளர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்ட பொழுது, விடுதலை முன்னணிக்கிளைகள் மூலம் நிதி மற்றும், நிவாரணப் பொருட்கள் சேகரிப்பதென்றும் பாதிக்கப்பட்ட மேற்படி மக்கள்வாழும் பகுதிகளை மாதிரிக்கிராமமாகக் கணித்து உடன் நடவடிக்கைகள் எடுக்கும்படி அரசாங்கத்தை கோருவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது [ச]

வெஸ்லி
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
பாட்டும் பரதமும்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி—விஜயா
செல்வம்

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Custer of the West

6-வது வெற்றி வாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

9-வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி நடித்த
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
டைரக்ஷன் ; A. பீம்சிங்

REGAL (Jaffna)
Now Showing
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m
BRAD HARRIS - JOEWORKER
in
SO DARLING SO DEADLY
Action Spy Film (Color)
விறுவிறுப்பான திகிலூட்டும் சண்டைக் காட்சிகள் நிறைந்தபடம்.

Shanthi - (Jaffna) Phone-7642
3nd Crowded Week!
10-30, 2-30, 4-45, 7-00,&9-30
SEVEN NIGHTS IN JAPAN
More Suitable for Adu ts — Eastman Color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி; 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00,2-00 6-00 & 9-30
எம். ஜி. ஆர். — பத்மினி
மதுரைவீரன் (புதிய பிரதி

லிடோ (யாழ். நகர்)
போன்: 7692
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

705-வது சுவீப்சீட்டிழுப்பின் முடிவுகள்வருமாறு:-

முதலாம் பரிசு
**03 R 0021**
ரூபா 1, 00, 000.

இரண்டாம் பரிசு
**08 F 0419**
ரூபா 40, 000.

மூன்றும் பரிசு
**12 N 0261**
ரூபா 10, 000

தலா ரூபா 1,447-23 சதவீதம் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| 10 A 0248 | 04 A 0110 |
| 16 A 0989 | 18 A 0224 |
| 09 B 0323 | 13 B 0132 |
| 05 C 0475 | 06 C 0348 |
| 14 C 0015 | 14 C 0835 |
| 24 C 0906 | 27 C 0233 |
| 15 D 0999 | 18 D 0417 |
| 08 E 0072 | 14 E 0055 |
| 25 E 0940 | |
| 04 F 0657 | 07 F 0150 |
| 19 F 0813 | 26 F 0895 |
| 03 G 0762 | |
| 01 H 0141 | 15 H 0638 |
| 05 J 0480 | 16 J 0181 |
| 17 J 0407 | 25 J 0712 |
| 26 J 0188 | |
| 01 K 0358 | 03 K 0373 |
| 11 K 0292 | 11 K 0775 |
| 27 K 0234 | 27 K 0558 |
| 11 L 0171 | 16 L 0050 |
| 18 L 0696 | |
| 09 M 0874 | 12 M 0038 |
| 22 M 0584 | 25 M 0915 |
| 03 N 0972 | 15 N 0852 |
| 22 N 0420 | 25 N 0833 |
| 13 O 0284 | 14 O 0138 |
| 24 O 0506 | |
| 05 P 0365 | 11 P 0286 |
| 13 P 0393 | 24 P 0762 |
| 28 P 0716 | 29 P 0563 |
| 05 Q 0304 | 12 Q 0944 |
| 23 Q 0050 | 27 Q 0890 |
| 30 Q 0853 | 31 Q 0399 |
| 08 R 0995 | 13 R 0433 |
| 14 R 0584 | 15 R 0019 |
| 18 R 0134 | 22 R 0878 |
| 03 S 0110 | 05 S 0993 |
| 06 S 0601 | 21 S 0203 |
| 22 S 0768 | |
| 04 T 0382 | 04 T 0534 |
| 13 T 0115 | 18 T 0620 |
| 29 T 0715 | |
| 03 U 0022 | 04 U 0686 |
| 08 U 0808 | 10 U 0362 |
| 29 U 0500 | |
| 04 V 0873 | 06 V 0922 |
| 08 V 0046 | 17 V 0738 |
| 20 V 0008 | |
| 06 W 0675 | 07 W 0951 |
| 25 W 0959 | |
| 18 X 0652 | 20 X 0187 |
| 21 X 0015 | |
| 25 Y 0330 | 30 Y 0435 |
| 10 Z 0694 | 15 Z 0825 |
| 20 Z 0116 | 24 Z 0239 |
| 26 Z 0938 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

# இந்த மீனவர்குறைகளை ராணுவ அதிகாரி அறிவார்

[புலோலி]

தொண்டமானாறுப்பகுதியில் மீனவர்களுடன் இராணுவத்தினர் நடந்து கொள்ளும் விதம் குறித்து வடபகுதிக்குப் பொறுப்பாக உள்ள இராணுவத் தளபதியான கேர்ணல் போட்டிடயஸ் மீனவர்களின் புகார்களை நேரடியாகக் கேட்டறிவார்.

மீனவர்களிடம் மீன்களை வாங்கவரும் இராணுவத்தினர் தொண்டமானாறு பெரிய கடற்கரைப்பகுதியில் வைத்து மீன்களை வாங்கும்போது அதற்குரிய பணத்தைக் கொடுக்காமலும் சிலசமயம் பணத்தைக்குறைத்துக்கொடுத்தும் மீனவர்களுககுக் கஷ்டங்களை உண்டு பண்ணுவதாகப் பருத்தித்துறை எம்.பி. திரு கே. துரைரத்தினத்திடம் புகார் தெரிவித்திருந்தனர்.

திரு. துரைரத்தினம் எம்.பி இது குறித்து இராணுவத் தளபதி திரு பேர்ட்டி டயஸுடன் தொடர்பு கொண்டதை அடுத்து இப்புகார் பற்றி தாம் நேரில் வந்து மீனவர்களிடம் கேட்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார். [அ]

# வடமராட்சி இளைஞர் ஒன்றியம்

[புலோலி]

"அதிகரித்துவரும் சனத்தொகை காரணமாக வேலையில்லாப் பிரச்னைகள் தலைதூக்கியுள்ளது இதனாலேயே அரசாங்கம் சகல அபிவிருத்தித் திட்டங்களிலும் வாலிபர்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றது."

இவ்வாறு வடமராட்சி இளைஞர் ஒன்றியத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் சட்டத்தரணி திரு. வ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "இளைஞர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவாகள் அவர்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் இளைஞர்களின் பங்கு இளைஞர்களின் பங்குநாட்டின் அபிவிருத்தியில் எவ்வளவு அதிகரிக்கின்றதோ அதற்கேற்ப நாட்டின் அபிவிருத்தி மேம்பாடடையும்" என்றார்.

இளைஞர் ஒன்றியத்தலைவர் ஆசிரியர் திரு. ஆ.க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் வட இலங்கைப் பண்பாட்டுக்கழகச் செயலாளரும் பருத்தித்துறை பனைவளர்ப்பு அபிவிருத்திச்சங்கத் தலைவருமான திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் திரு. எஸ்.எஸ். ஸ்ரீதரன் திரு. எஸ். ஜெயக்குமார் திரு எஸ்.எஸ். ஞானச்சந்திரன் ஜெயக்குமார் திரு. ஜே ஏ சுபேந்திரராசா உட்பட பலரும் உரையாற்றினர். [உ]

# வருடாந்த விருந்து

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்ற வருடாந்த இரவு விருந்து எதிர்வரும் சனிக்கிழமை நடைபெற விருக்கிறது.

# ஆசிரியர்களைப்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ஐயா. க பாலகிருஷ்ணன், திருமதி ந நாகராசா, இ ஆனந்தசுந்தரம். செல்வி ஞா நமசிவாயம், கு கந்தசாமி, த ஐயாத்துரை, வே செல்லத்துரை, சு குமாரசிங்கம், நா யோகநாதன், திருமதி செ நடராசா ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர்கள் அ சரவணமுத்து நம சிவப்பிரகாசம்,மாவட்டப் பதிவாளர் இ. கதிர்காமலிங்கம்.

# பிரயாணிகளுக்குத் தொல்லையாம்

[நெல்லியடி]

நெல்லியடி பஸ்தரிப்பு நிலையத்தில் தேவையற்று இருப்போரையும் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பிரயாணிகளுக்கு பலவிதத்திலும் தொல்லை கொடுப்போரையும் பற்றி பருத்தித்துறை பொலிசாருக்கு புகாரிடப்பட்டுள்ளது. [உ]

# உழைப்பின் பாதையில் வந்தவர் 'வித்தி'

### பாராட்டுவிழாவில் மாணிக்கவாசகர்

[யாழ்ப்பாணம்)

'அன்று வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியில் பரமேஸ்வராக் கல்லூரியைப் பல்கலைக் கழக வளாகமாக ஆக்குவதற்கு நான் முனைந்தபோது பல எதிர்ப்புகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. அச்சூழ் நிலையிலும் நான் தூரநோக்குடன் செயலாற்றினேன் என்பதைக் காலம் இன்று உணர்த்திவிட்டது. இன்று நாம் நமக்கெனத் தனிப் பல்கலைக் கழகத்தைப் பெற்றுவிட்டோம்'

இவ்வாறு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் உரைநிகழ்த்துகையில் கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது:

## உழைப்பின் பாதையில் வந்தவர்

'விரிவுரையாளராக இருந்து பேராசிரியராகி வளாகத் தலைவராகப் பதவி பெற்று, இன்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராக உயர்ந்திருக்கும், கலாநிதி வித்தியானந்தன் உயர்ந்து வந்த பாதை உழைப்பின் பாதை, தன்னலம் கருதாத் தொண்டின் பாதை, தான் சரியெனக் கருதுவதை செய்ய நினைப்பதை எத்தனை எதிர்ப்புகள் குறுக்கிட்டாலும் அவற்றை முறியடித்துச் சாதித்துக் காட்டும் திறமையின் பாதை.

'நாட்டார் கலைகளின் வளர்ச்சிக்காகவும் மீட்சிக்காகவும் அவர் செய்த சேவைகளை நாடறியும். இன்று வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்துக்களைப் பற்றி நாம் பேசுகிறோமென்றால், ஏதோ சிலவற்றை அறிந்து வைத்திருக்கிறோமென்றால், அப்படி எம்மை அறியவும் பேசவும் செய்த பெருமை கலாநிதி வித்தியானந்தனையே சாரும். வித்தியானந்தன் என்றொருவர் இந்த நாட்டுக் கூத்துக்களைப் பற்றிச் சிந்தித்து எங்கெல்லாமோ கிராமங்களில் மறைந்து கிடந்த அந்த அழகிய கலைப்பொக்கிஷங்களையெல்லாம் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தாதிருந்ததால் இந்த இயந்திர யுகத்தின் வீச்சில் அவற்றையெல்லாம் நாம் நாளடைவில் மறந்திருப்போம்.

இலக்கியத்துறையில் 'தமிழர் சால்பு', 'இலக்கியத்தென்றல்', கலையும் பண்பும் முதலிய நூல்களை அவர் எழுதினர். மாணவர்களுக்கு அழகாக மனதில் பதியத்தக்க வண்ணம், இரசிக்கத்தக்க வகையில் இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்தார். மூன்றாவது தமிழாராச்சி மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாகத் திறம்பட நடாத்திக்காட்டினர். கண்டி சைவமகாசபையின் தலைவராக இருந்து பல தொண்டுகள் செய்தார். பேராதனை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவராக இருந்தார்- என்றெல்லாம் எவ்வளவோ பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அவரிடம் படித்த எத்தனையோ மாணவர்களிடமெல்லாம் நான் தொழில் ரீதியில் பழகியிருக்கிறேன், அவர்கள் அவரைப்பற்றிக் கதைகதையாகத் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய 'மன்னித்துமறந்துவிடும்' பண்பைப்பற்றி அறிந்து சிலிர்த்திருக்கிறேன்'' [அ]

## "தகுதியுள்ள சகல மாணவரையும் அனுமதிக்கவேண்டும்" - சண்முகதாசன் அறிக்கை

[யாழ்ப்பாணம்[

யூ. என். பீ. அரசாங்கம், மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிப்பதற்கு மாகாண அடிப்படையில் நடைமுறைப்படுத்த இருக்கும் திட்டத்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்துள்ளது இது தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பாதிக்கும் நடவடிக்கை என்றும் ஒரு வகுப்புவாத நடவடிக்கை என்றும் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கை புரட்சிவாத கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. என், சண்முகதாஸன் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

### எதிர்க்கட்சியில் இருந்தபோது...

யு என்.பி. எதிர்க்கட்சியில் இருந்தபோது கூட்டுமுன்னணி அரசாங்கம் மாணவர்களை இன அடிப்படையில் புள்ளிகளைத் தரப்படுத்திப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதித்த திட்டத்தை எதிர்த்து ஆனால் இன்று அவர்கள் ஒருபடி முன்னேறி படு பிற்போக்கானதும் மிகவும் வகுப்புவாதமானதுமான நடவடிக்கையை எடுக்க உள்ளார்கள்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவோரின் தொகையில் இன அடிப்படையிலான விகிதாசாரத்தைக் காட்டி சிங்கள மாணவர்களையும் பெற்றோரையும் திசைதிருப்பி பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படத் தகுதி பெற்றும் அனுமதி பெற முடியாதிருக்கும் பெருந்தொகையான சிங்கள தமிழ் மாணவர்களின் பிரச்சினையை மக்களிடமிருந்து மறைக்க யு. என். பி. முயற்சி செய்கிறது.

பின்தங்கிய பிரதேசங்களுக்கும் மாணவர்களுக்கும் உதவி செய்வது பின்தங்கியபிரதேசங்களிலுள்ள மாணவர்களின் கல்வித்தரத்தை நல்ல ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமும் மேலதிக பாடசாலை வசதிகளை அளிப்பதாலுமே செய்யமுடியும். அதற்காக திறமைசாலிகளான மாணவர்களைபாதிக்கச் செய்யவேண்டியதில்லை.

இந்த பிற்போக்கான பல்கலைக்கழக அனுமதித்திட்டத்திற்கு எதிராக வடபகுதி மாணவர்களும் இளைஞர்களும் ஈடுபட்டுள்ள எதிர் இயக்கத்திற்கு எமது ஆதரவை அளிப்பதுடன் உயர்கல்வி மந்திரியை இந்த பிற்போக்கான அனுமதி முறையை வாபஸ்வாங்கி பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி வாய்ந்த சகல மாணவர்களையும் அனுமதிக்கும்படி இலங்கை புரட்சிவாத கம்யூனிஸ்ட்கட்சி கேட்டுக்கொள்ளுகிறது. [க-அ]

## தமிழ்க் காங்கிரஸ் வழக்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்க்காங்கிரஸ் வழக்கில் மனுதார்களின் சட்டத்தரணியான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை நேற்று தொடர்ந்து தொகுப்புரை நிகழ்த்தினர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது.

விசாரணை இம்மாதம் 23ம் திகதிவரை ஒத்திப்போடப் பட்டுள்ளது. (க)

## புற்றுநோய் ஆஸ்பத்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதியில் 'கோபோல்ற்' கருவி போன்ற நவீன கருவிகளைக் கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்றை அமைத்துத்தரும்படி வடபகுதி புற்றுநோய்ச் சங்கம் அரசாங்கத்திடம் கடந்த 15 வருடங்களாக வேண்டுகோள் விடுத்திருந்தது.

கொழும்புக்கு வெளியில் கூடுதலான புற்று நோயாளர் வசிக்கும் இடங்களில் வெளிநாடுகளால் அன்பளிப்புச் செய்யப்படும் "கோபோல்ற்' போன்ற நவீன கருவிகளைக் கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரி அமைப்பதென்ற அரசின் கொள்கைப்படி கொழும்புக்கு வெளியில் கூடுதலான புற்றுநோயாளர் உள்ள வடபகுதியில் ஒருபுற்றுநோய் ஆஸ்பத்திரி அமைக்கப்படவில்லை. அதே வேளையில் மிகக் குறைந்தளவு நோயாளர் உள்ள கண்டியில் புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று, காலியிலும் பணம் படைத்த ஒரு சிலர் 6 லட்சம் ரூபா செலவில் புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளதால் அங்கும் நவீன கருவிகளைக் கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரி அமைப்பதற்கு அரசு எண்ணியுள்ளது.

வடபகுதிக்கும் நவீன கருவிகளை அரசு தந்து உதவுமேயானல் எமது மத்தியிலுள்ள மக்களும் ஆஸ்பத்திரி கட்டுவதற்கான முயற்சியில் ஈடுபடுவர்.

### சுகாதார அமைச்சருடன் தொடர்பு

இதுதொடர்பாக வைத்திய நிபுணர் டாக்டர் எஸ், நற்குணம் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியாவை நேரில் சந்தித்து வடபகுதியில் புற்றுநோய் ஆஸ்பத்திரி நிறுவுவது பற்றி ஆலோசித்தபோது 'மகரகம ஆஸ்பத்திரியில் புற்றுநோய் வைத்திய நிபுணர்கள் 6 பேர் இருந்த இடத்தில் 3 வைத்திய நிபுணர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்றும் கண்டியில் ஆஸ்பத்திரி இருந்தும் வைத்திய நிபுணர்கள் இல்லாததனால் அந்த ஆஸ்பத்திரிகூட இயங்க முடியாதநிலையில் இருக்கின்றது, சந்தர்ப்பம் கிடைக்கும்போது யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி அமைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்' என்றும் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் வடபகுதியைச் சேர்ந்த பல டாக்டர்களும், சமூகசேவை ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றினர். [இ]

## வியட்நாமி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### 10 ஆயிரம் வியட்நாமியர் பலி!

இந்த யுத்தத்தில் சீனப்படைகள் 500மைல் கொண்ட தமது எல்லையில் 3 வியட்நாமிய படைப்பிரிவுகளை முற்றாக அழித்ததுடன் 10 ஆயிரம் போர் வீரர்களையும் படுகொலை செய்துள்ளன என்று சீன வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

### 5 ஆயிரம் சீனர்கள் பலி!

இதேவேளையில் இந்த யுத்தத்தில் 5 ஆயிரம் சீனர்களை வியட்நாம் படைகள் கொலை செய்ததாகவும் இன்றுகாலையே எல்லையில் அதிஉக்கிரமான போர் இடம்பெற்றதாகவும் ஹனோய் வானொலி அறிவித்தது.

வியட்நாமுக்குள் புகுந்த சீனப்படையினரால் வியட்நாமியரின் வீடுகள் சூறையாடப்பட்டுள்ளதாகவும், பெண்களும், சிறுவர்களும் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் ஹனோய் வானொலி அறிவித்தது. [இ]

## தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிமாறும் எம். பி க்கள் தொடர்பான அரசியல் அமைப்பு திருத்தச் சட்டமூலம் குறித்தும், நிலம்காக்கும் பணிக்கு தீவிரமாக ஈடுபடுவதற்கான பணிகளை வகுப்பது குறித்தும் கூட்டத்தில் ஆராயப்படும்.

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரையின் விவகாரம், ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினால் இன்னும் ஆராயவில்லையாதலால் இன்றைய கூட்டத்தில் இவ்விவகாரம் பற்றி எதுவித முடிவும் எடுக்கப்படமாட்டாதென தெரிகிறது. (கெ-இ)

## சென். மேரிஸ் வெற்றி

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட நொக்வுட் போட்டியின் அரை இறுதியாட்டத்தில் சென். மேரிஸ் கழகம், பாடும்மீன் கழகத்தை 4—1 கோல்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

### இன்றைய ஆட்டம்

இன்றைய அரைஇறுதிப் போட்டியில், யாழ். முஸ்லிம்ஸ் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகம் மோதும். [இ]

## சக்தியுடன் ஐக்கியமானர்

[யாழ்ப்பாணம்]

''அமரர் சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் சக்திஉபாசகர். ஊரெழு துர்க்கை அம்மன் கோவில் சக்தியை பிரதிஷ்டை செய்துவிட்டு, அவரின் கிரியா சக்தி, சக்தியுடன் ஐக்கியமாகியது.''

சிவானந்த குருகுல மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட அமரர் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்களின் அஞ்சலிக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் நியாயசிரோமணி மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வஞ்சலிக்கூட்டம் யாழ். கடைச்சாமிவீதியிலுள்ள நடேசர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் சிவஸ்ரீ நா. சோமசுந்தரக்குருக்கள் பேசுகையில் கூறியதாவது! ''அமரரின் கீழ் சிஷ்யராக இருந்து பிரதிஷ்டையில் ஒவ்வொரு அம்சத்தின் பொருளையும் மந்திர பூர்வமாகச் செய்யும் கிரியைகளின் மகிமையையும் அறிந்து கொண்டேன். குருக்கள் எந்தக் கிரியை செய்தாலும் அதை ஆதார பிரமாணங்களை ஒட்டியே செய்தார்''

குருகுல நிர்வாகஸ்தர் பிரம்மஸ்ரீ ப சுப்பரமணிய ஐயர், நாயன்மார்கட்டு சிவஸ்ரீ சாம்பசிவக்குருக்கள், சிரஞ்சீவி ந. கேதீஸ்வரன் ஆகியோர் அஞ்சலிசெலுத்தி உரைநிகழ்த்தினர். [கொக். நி. ஈ]

## மேற்கிந்தியா

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய கோஷ்டி வெற்றிபெற்றது.

மேற்கிந்திய கோஷ்டி 45 ஓவர்களில் 7 விக்கட் நஷ்டத்திற்கு 256 ஓட்டங்களைப்பெற்றது. காப்டன் ஆல்வின் களிச்சரன் 101 ஓட்டங்களையும், பக்கஸ் 90 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கைக் கோஷ்டி 45 ஓவர்களில் 8 விக்கட் நஷ்டத்திற்கு 151 ஓட்டங்களைப் பெற்றது. டுலிப மெண்டிஸ் 39 ஓட்டங்களை பெற்றார். [இ]

## விசேட தொலைபேசி எண்கள்

[கொக்குவில்]

வடபகுதிக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளுடன் தாமதமின்றித் தொடர்பு கொள்ளும் பொருட்டு அவர்களுக்குத் தனித்தனி தொலைபேசி வசதிகளைக் கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளது.

இலக்க விபரம் வருமாறு!

வடபகுதிக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர்: 7086; கணக்காளர் திரு. என். திருநாவுக்கரசு: 449. கல்வித் திணைக்கள ஏனைய அதிகாரிகளுக்கான இலக்கங்கள்: 554, 7555. [அ]

## மரண அறிவித்தல்

### V. C. கனகரட்ணம்

V. C. கனகரட்ணம் (Retired assistant Commisioner of agrarian Service) அவர்கள் காலமானர். இவர் மீனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமாரியின் தகப்பனரும், உதயகுமார் (இ. போ. ச. பருத்தித்துறை) அவர்களின் மாமனும், வாசுகியின் பேரனுமாவார்.

பூதவுடல் இன்று (புதன்கிழமை) மாலை 4 மணி அளவில் 27, வைமன் வீதியிலிருந்து, கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

1704 -திருமதி கனகரட்ணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 889, Registered as a News Paper in Sri Lanka.-